

கலைஞர் 100
1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

விழுவது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 263 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 22 – செவ்வாய்க்கிழமை 05 மே 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 263 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 22 - Tuesday 05 May 2026 - Madurai 8 Pages ₹ 5.00




கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.5.2026) மாலை சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.5.2026) மாலை சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., அமைச்சர் பி.கே.சேகர்பாபு மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## சட்டமன்றத் தேர்தல்: பல தொகுதிகளில் தி.மு.க. தலைமையிலான

# மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி முன்னணி!

## அமைச்சர்கள் வெற்றி !

**சென்னை, மே 5-**

**தமிழ்நாடு உள்ளிட்ட ஐந்து மாநிலங்களில் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களின் வாக்கு எண்ணிக்கை நேற்று காலை 8 மணிக்குத் தொடங்கியது. தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் தி.மு.க. முன்னிலை பெற்றுள்ளது.**

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு கடந்த மாதம் 23ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன.

மொத்தம் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்காக 62 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்காக தொகுதிக்கு ஒன்று வீதம், 234 வாக்கு எண்ணும் அறைகளும், தபால் வாக்குகளை எண்ணுவதற்கு கூடுதல் அறைகளும் அமைக்கப்பட்டிருந்தன.

வாக்கு எண்ணிக்கைக்காக மொத்தம் 3 ஆயிரத்து 324 மேஜைகள் அமைக்கப்பட்டிருந்த நிலையில், ஒரு மேஜைக்கு தலா ஒரு மேற்பார்வையாளர், நுண் பார்வையாளர், உதவியாளர், கணினி பதிவாளர் ஆகிய 4 பேர் என்ற அடிப்படையில், ஒட்டுமொத்தமாக 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்டனர்.

இதுதவிர தேர்தல் ஆணையத்தின் விதிகள் முறையாக பின்பற்றப்படுவதை உறுதி செய்ய ஒரு தொகுதிக்கு ஒரு வாக்கு எண்ணும் பார்வையாளர் என்ற அடிப்படையில் 234 பேர் நியமிக்கப்பட்டனர்.

காலை 8 மணிக்கு வாக்கு எண்ணும் பணி தொடங்கப்படும் நிலையில், முதலில் தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. இதனைத் தொடர்ந்து வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி தொடங்கியது.

வாக்கு எண்ணும் மையங்களின் மூன்றடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முதல் அடுக்கில், வாக்கு எண்ணும் அறைகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு அறைகளின் முன் மத்திய பாதுகாப்பு படையினர் நிறுத்தப்பட்டிருந்தனர். இரண்டாவது அடுக்கில் தமிழ்நாடு காவல்துறையினரும், மையத்தின் 100 மீட்டர் சுற்றளவில் 3வது அடுக்கில் ஆயுதப் படையினரும் நிறுத்தப்பட்டிருந்தனர்.

**தேர்தல் ஆணையம் ஆலோசனை**

இதனிடையே தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கான இறுதி கட்ட ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையம் ஆலோசனை நடத்தியது. காணொளி மூலம் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் 234 தொகுதிகளுக்கான தேர்தல் பார்வையாளர்கள் பங்கேற்றனர். வாக்கு எண்ணிக்கை ஏற்பாடுகள், பாதுகாப்பு, தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிவுகளை அறிவிப்பதற்கான நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசனை நடைபெற்றது. தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் இக்கூட்டத்தில் பங்கேற்றார்.

இந்நிலையில் சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதில், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் பல தொகுதிகளில் முன்னிலையில் உள்ளன. மேலூர் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் விஸ்வநாதன் வெற்றி பெற்றதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. மயிலாடுதுறை வேட்பாளர் ஜமால் முகமது, விளவங்கோடு பிரவீன், கடலூர் வேட்பாளர் சந்திரசேகரன், திருவாடானை கருமாணிக்கம் மற்றும் குளச்சல் தாரகை கத்பட் ஆகிய காங்கிரஸ் வேட்பாளர்கள் முன்னிலையில் உள்ளனர்.

தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் விருதுநகர் தொகுதியில் விஜய பிரபாகரன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் காட்டு மன்னார் கோவில் ஜோதிமணி, பண்ருட்டி வேட்பாளர் அப்துல் ரகுமான் ஆகியோர் முன்னிலையில் உள்ளனர்.

இதேபோன்று, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்துறைபூண்டி மாரிமுத்து, ஸ்ரீவில்லிபுத்தூர் மகாலிங்கம் ஆகியோர் இரண்டு தொகுதிகளிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பத்மநாபபுரம் தொகுதி வேட்பாளர் செல்லசாமியும் முன்னிலையில் உள்ளன. நாகப்பட்டினத்தில் மனிதநேய மக்கள் கட்சியின் ஜவாஹிருல்லாவும் முன்னிலையில் உள்ளனர்.

**துணை முதல்வர் – அமைச்சர்கள் முன்னிலை!**

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தங்கம் தென்னரசு, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன், அர.சக்கரபாணி, எஸ்.எஸ்.சிவசங்கர், பி.கே.சேகர்பாபு, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி உள்ளிட்ட கழக முன்னணியினர் முன்னிலையில் உள்ளனர்.

**அமைச்சர் கே.என்.நேரு வெற்றி!**

திருச்சி மேற்கில் அமைச்சர் கே.என்.நேரு, திண்டுக்கல்லில் ஐ.பி.செந்தில் குமார், பாளையங்கோட்டையில் அப்துல் வகாப், கூடலூரில் திராவிடமணி, அரவக்குறிச்சியில் இளங்கோ ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

---

### திருநங்கையர் உரிமை பறிப்பு சட்டத்தை ரத்து செய்ய கோரிய வழக்கு!

## ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் நோட்டீஸ் !

### 6 வாரத்தில் பதிலளிக்க உத்தரவு!

*புதுடெல்லி, மே 5-*

*திருநங்கையர் நலனுக்கு எதிரான சட்டம் கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனை எதிர்த்து பல்வேறு திருநங்கையர் அமைப்புகள் உச்சநீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தன. இந்த வழக்குகள் உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி சூர்யகாந்த் அமர்வில் விசாரணைக்கு வந்தது.*

*அப்போது, மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அபிஷேக் சிங்வி, பிறப்பில் திருநங்கையர் ஆக பிறந்தவர்களை மருத்துவ சான்றிதழ் பெற வேண்டும் என்று கூறுவது அரசியல் சாசன உரிமைக்கு எதிரானது என்றும் முந்தைய உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது என்றும் வாதிட்டார். மருத்துவ அறுவை சிகிச்சை செய்தால் தண்டனை வழங்கும் வகையில் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதனை ரத்துசெய்ய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.*

*இதனைத் தொடர்ந்து, ஒன்றிய அரசு 6 வாரத்தில் பதிலளிக்க வேண்டும் என நோட்டீஸ் அனுப்பி உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும் அனைத்து மாநில அரசுகளையும் வழக்கில் இணைக்கவும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அத்துடன், இந்த வழக்கை விசாரிக்க 3 நீதிபதிகள் அடங்கிய தனி அமர்வு அமைக்கப்படும் என்றும் உச்சநீதிமன்றம் அறிவித்தது.*

---

### மேற்கு வங்க ஃபால்டா தொகுதியில்

## மே 21-ல் மறு தேர்தல் அறிவிப்பு!

கொல்கத்தா, மே 5 –

மே 21 அன்று மேற்கு வங்கத்தின் ஃபால்டா தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மறு தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிக்கையில், ஃபால்டா சட்டப்பேரவைத் தொகுதியில் உள்ள அனைத்து வாக்குச்சாவடிகளிலும் மே 21 அன்று மறு தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இந்த தொகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் மிகப்பெரிய அளவிலான முறைகேடுகள் நடந்ததாக பா.ஜ.க. குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதன்படி, மே 21 அன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும் என்றும், வாக்கு எண்ணிக்கை மே 24 அன்று நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## ஹோர்முஸ் நீரிணையைக் கடந்த இந்திய எரிவாயு கப்பல்!

### 13-ஆம் தேதி விசாகப்பட்டினம் வந்தடையும்!

*புதுடெல்லி, மே 5-*

*ஹோர்முஸ் நீரிணையை இந்திய எரிவாயு கப்பல் கடந்துள்ளது.*

*‘எம்.டி. சர்வசக்தி’ என்னும் அந்த சரக்குக் கப்பல் வரும் 13 ஆம் தேதி விசாகப்பட்டினம் துறைமுகம் வந்தடையும் என தகவல் வெளியாகியுள்ளது.*

*இதுகுறித்து மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-*

*எம்.டி.சர்வ சக்தி என்ற சரக்குக் கப்பல், 46,313 மில்லியன்டன் எல்பிஜி எரிவாயு ஏற்றிக் கொண்டு ஹோர்முஸ் நீரிணையை சனிக்கிழமை கடந்தது. அந்தக் கப்பலில் 18 இந்திய மாலுமிகள் உள்பட மொத்தம் 20 மாலுமிகள் உள்ளனர்.*

*அந்த கப்பல் வரும் 13 ஆம் `தேதி ஆந்திர மாநிலம் விசாகப் பட்டினத்தை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி அந்த கப்பல், ஓமன் வளைகுடாவில் நின்று கொண்டிருந்தது. இக்கப்பலில் உள்ள எரிவாயு மூலம் நாட்டில் அரை நாள் எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய முடியும்.*

*ஈரான், அமெரிக்கா, இஸ்ரேல் இடையேயான போர் தொடங்கிய பிறகு, ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து வந்த முதல் இந்திய எரிவாயு கப்பல் ‘சர்வ சக்தி’ ஆகும். இந்த கப்பல் தவிர, ஹோர்முஸ் நீரிணையை கடக்க முடியாமல் கடற்பகுதியில் இந்தியாவுக்குச் சொந்தமான 14 சரக்குக் கப்பல்கள் நங்கூரமிட்டு நின்று கொண்டிருக்கின்றன என்று மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.*

*அமெரிக்கா, இஸ்ரேலுடனான போரின் காரணமாக, கச்சா எண்ணெய், எரிவாயு கப்பல்கள் அதிகம் செல்லும் ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடிவிட்டது.*

*இதற்கு பதிலடியாக, ஈரான் துறைமுகங்களை அமெரிக்க கடற்படை கப்பல்கள் கடந்த சில நாள்களாக முற்றுகையிட்டுள்ளன.*

*இதனால் ஹோர்முஸ் நீரிணை வழியே கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு கப்பல்கள் செல்வது பாதிக்கப்பட்டுள்ளது. இதில் இந்திய கப்பல்களும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.*